(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

7 சைவசமய பாடப்பரீட்சை : 2020

தரம் ஏழு



nselva.com

கால அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ''இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது யாருடைய வாக்கு

   1. விபுலானந்தர் 2. நாவலர் 3. விவேகானந்தர் 4. இராமகிருஷ்ணர்

2. திருமணம் நடந்தபோது இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர்

   1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரர் 3. சேரமான் 4. வீரபத்திரர்

3. "நாகநாதர்" எழுந்தருளியிருக்கும் தலம்.

   1. கதிர்காமம் 2. திருக்கோணேஸ்வரம்
   3. திருக்கேதீஸ்வரம் 4. கொக்கட்டிச்சோலை

4. கொலை, களவு, பொய், காமம், கள்ளுண்ணல் எனப்படுபவை.

   1. ஐம்பொறிகள் 2. ஐம்புலன்கள்
   3. பஞ்சமா பாதகங்கள் 4. ஐந்தொழில்கள்

5. ''நமசிவாய" என்பது.

   1. திருமந்திரம் 2. பிரணவ மந்திரம்
   3. சிவசின்னம் 4. பஞ்சாட்சரமந்திரம்

6. சைவ சமயத்தவர்களின் முக்கிய புனித நாள்.

   1. அஷ்டமி 2. பஞ்சமி 3. ராகு காலம் 4. வெள்ளிக்கிழமை

7. நன்றி மறவாமை எனும் பண்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர்.

   1. துரியோதனன் 2. பரசுராமன் 3. கும்பகர்ணன் 4. பீமன்

8. கந்த புராண அரங்கேற்றம் நிறைவெய்தியது.

   1. ஒரே நாளில் 2. முப்பது நாட்கள்
   3. ஓராண்டில் 4. ஐந்தாண்டு

9. ஒரு பெண்ணிற்கு அவரது தாயார் வடிவில் வந்து பிரசவகால உதவி செய்தவர்.

   1. ஔவையார் 2. அன்னைதுர்க்கா
   3. திருச்சிராப்பள்ளி குன்றுடையான் 4. மதுரை மீனாட்சி

10. கொலு வைத்தல் நிகழ்வு இடம் பெறும் பண்டிகை.

    1. நவராத்திரி 2. சிவராத்திரி 3. திருவாதிரை 4. புதுவருடம்

11. அருணகிரிநாதரின் திருப்புகழில் போற்றப்படும் கடவுள்

1. கணபதி 2. முருகன் 3. சிவபெருமான் 4. திருமால்

12. இறைவாத இன்ப அன்பு வேண்டும் என்று இறைவனை வேண்டியவர்.

1. அப்பர் 2. மணிவாசகர்

3. காரைக்கால் அம்மையார் 4. கச்சியப்பர்

13. சுந்தரர் இறைவனோடு தோழமை பூண்டு பக்தி கொண்ட நெறி

1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம்

14. கடம்ப மாலை அணிபவர்.

1. கணபதி 2. உமாதேவியார் 3. முருகப் பெருமான் 4. சூரியன்

15. சேர். பொன் இராமநாதன் அவர்களுக்கு பிரபுப்பட்டம் வழங்கப்பட்ட ஆண்டு.

1. 1931 2. 1921 3. 1930 4. 1940

16. சூக்குமலிங்கம் எனப்படுவது.

1. ராஜ கோபுரம் 2. நந்தி 3. கருவறை இறைவன் 4. கொடிமரம்

17. "பொன்னார் மேனியனே" என்ற திருப்பாடலின் பண்.

1. நட்ட ராகம் 2. நட்டபாடை

3. காந்தாரம் 4. புறநீர்மை

18. கல்லாட தேவர் அருளிய பாடல்கள் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்.

1. 07 2. 09 3. 12 4. 11

19. சிவபிரான் யாருடைய கனவில் எழுந்தருளி, ''மழபாடிக்கு வர மறந்தாயே" என்றருளினார்.

1. சேந்தனார் 2. சுந்தரர் 3. ஞானசம்பந்தர் 4. பூசலார்

20. மாணிக்கவாசகர் குருபூசை தினம்

1. ஆடிச் சோதி 2. ஆனி மகம் 3. சித்திரைச் சதயம் 4. வைகாசி மூலம்

21. அநபாயச் சோழன் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்த இடம்

1. திருவாரூர் 2. சிதம்பரம் 3. மதுரை 4. திருச்சிராப்பள்ளி

22. பூச நட்சத்திரத்தின் தேவதை

1. சந்திரன் 2. சூரியன் 3. பிரகஸ்பதி 4. புதன்

23. புதுமனை புகுதல் எனப்படுவது.

1. நிலை வைத்தல் 2. செப்புத்தகடு வைத்தல்

3. அத்திவாரம் இடல் 4. கிரஹப்பிரவேசம்

24. ஸ்ரீராமர் தன் மனைவியுடன் வனவாசஞ் சென்ற போது அவர்களுடன் சென்றவர்.

1. பரதன் 2. இலக்குவன் 3. பலராமன் 4. அனுமன்

25. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் அமைவிடம்

1. நுவரெலியா 2. கண்டி 3. யாழ்ப்பாணம் 4. பழனி

(25 புள்ளிகள்**)**

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சுந்தரமூர்த்தி நாயனார் முதன் முதலில் பாடிய பதிகத்தின் முதலடியை எழுதுக?

.....

2. உழவாரப்படையாளி எனப் போற்றப்படுபவர் யார்?

.....

3. மூஷிகவாகனன் என அழைக்கப்படுபவர்.

.....

4. முனிவர்கள், தங்கியிருந்து கல்வி போதித்த இடம் எது?

.....

5. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகக் செய்யும் தொழில்கள் எவை?

.....

6. சிவபெருமான் இந்த தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார்.

.....

7. நாம் கும்பம் வைக்கும் போது தேங்காயின் கீழ் எத்தனை மாவிலையை அமைத்தல் வேண்டும்?

.....

8. ஆலயங்களில் தினமும் நடைபெறும் கிரியைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

9. 80ம் ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்?

.....

10. மகாமகம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்?

.....

11. வித்தியாரம்பம் என்பதை வேறு எவ்வாறு அழைப்பர்?

.....

12. அபிராமி அந்தாதி பாடியவர் யார்?

.....

13. நாட்டார் தெய்வங்களுக்குச் சடங்கு செய்பவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவார்கள்?

.....

14. பெரிய புராணம் யாரால் பாடப்பட்டது?

.....

15. பிரதோஷ விரதம் எக்கடவுளை நினைத்து அனுட்டிக்கப்படுகின்றது?

.....

(15 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. “நிரைகழலரவம்.....”
2. “நங்கடம்பனைப் .....”
3. “அம்மையே அப்பா .....”
4. “முத்திநெறி யறியாத .....”

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய திருக்குறள்களை எழுதுக.

1. "பொறி வாயில் ஐந்து ....."
2. "வான் நின்று உல ....."
3. "நெடுங்கடலும் தன் ....."
4. "உரன் என்னும்....."
5. "ஒல்லும் வகையான் ....."

(1 x 5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1. சமயம் என்றால் என்ன?

2. நவராத்திரி காலங்களில் பாடசாலைகளில் இடம் பெறும் நிகழ்வுகள் மூன்று தருக.
3. நவராத்திரி விரதம் எத்தனை நாட்கள் அனுட்டிக்கப்படுகிறது?

(9 புள்ளிகள்**)**

2. 1. எமது வாழ்வியல் நற்பண்புகளாக கருதப்படுபவை மூன்று தருக.

2. ''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை" என்பது யாருடைய வாக்கு?
3. வருடாந்தம் நாம் கொண்டாடும் மூன்று பண்டிகைகளை எழுதுக.

(9 புள்ளிகள்**)**

3. 1. திருக்கோவையார் பாடியவர் யார்?

2. தமிழ் மறை என போற்றப்படுவது எது?
3. அடங்கன் முறை பற்றியும் அவற்றில் அடங்குபவைகளையும் குறிப்பிடுக.

(9 புள்ளிகள்**)**

4. 1. திருநாவுக்காரசரும் திருஞானசம்பந்தரும் இணைந்து புரிந்த இரு அற்புதங்களைத் தருக.

2. சமய குரவர்கள் நால்வரும் முத்தியடைந்த தினங்களை எழுதுக.
3. சுந்தரமூர்த்தி நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் மூன்று தருக.

(9 புள்ளிகள்**)**

5. 1. முனியப்பர் வழிபாடு பெருவழக்காக இருந்து வரும் மாவட்டம் எது?

2. காளியம்மன் வழிபாடு சிறப்பாக இடம்பெறும் பிரதேசங்கள் மூன்று தருக.
3. இராவணன் தன் தாயின் அபரக்கிரியைகள் செய்வதற்காக அமைத்த தீர்த்தம் எவ்வாறு அழைக்கப்படும்?

(9 புள்ளிகள்**)**

6. 1. ''இறவாமல் பிறவாமல்....." என தொடங்கும் பாடல் யாரால் பாடப்பட்டது?

2. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதற் தலைவர் யார்?
3. ஆலயத் தொண்டுகள் மூன்று தருக.

(9 புள்ளிகள்**)**